# சுடலைகளாகும் நகரங்கள்



1258

JPL
C1258

தீர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடலைகளாகும் நகரங்கள்

தீரன்

KOHA
JPL

81754C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை பதிவு
முதற்பதிப்பு: புரட்டாதி 1989
ஓவியர்: வீ.எம். மணிமாறன்,
சென்னை-28.

சேர்வு எண்
பண்
894-8111

கிடைக்குமிடங்கள்:

- Ceylon Art Centre,
  Boite No. 2,
  1, Allee Moliere,
  95140 Garges Les Gonesse,
  France.
- காந்தளகம்,
  834 அண்ணா சாலை,
  சென்னை - 600 002.
- காந்தளகம்,
  213, காங்கேயன்துறை வீதி,
  யாழ்ப்பாணம்.
- பூபாலசிங்கம் புததகசாலை,
  ஆஸ்பத்திரி வீதி,
  யாழ்ப்பாணம்.

**விலை ரூ. 8.00**

ஒளிஅச்சுக்கோப்பு, அச்சிடல்: காந்தளகம்,
சென்னை - 600 002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81754
KOHA JPL
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## உள்ளடக்கம்



| | | |
|---|---|---|
| பதிப்புரை | ... | 1 |
| முன்னுரை | ... | 4 |
| சுடர்களின் பிரகாசம் | ... | 7 |
| புதிய காலங்களை நோக்கி | ... | 13 |
| சுதந்திர தினம் | ... | 16 |
| எழுதி வைப்போம் | ... | 20 |
| சங்கே முழங்கு | ... | 24 |
| புரியாத மனிதர்கள் | ... | 29 |
| விடிவு | ... | 34 |
| தியாகிகள் | ... | 37 |
| அடிமை | ... | 40 |
| பாடுகுயிலே நீ பாடுகுயிலே | ... | 44 |
| கோடை நிழல்கள் | ... | 48 |
| அம்மாவுக்கோர் கடிதம் | ... | 52 |
| அண்ணனுக்கோர் கடிதம் | ... | 61 |
| தம்பிக்கோர் கடிதம் | ... | 74 |
| தேசிய நலம் வேண்டி நாளும் உழைத்த சமாதானத் தூதுவன் விஜேகுமாரணதுங்க | ... | 81 |
| ஏழைகள் தோழன் என்றும் எம்முடன் வாழும் எம்.ஜி.ஆர் | ... | 85 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

1




# பதிப்புரை

செல்வன் தீரன், யாத்த "சுடலைகளாகும் நகரங்கள்" என்னும் இச் சிறு கவிதைத் தொகுப்பு புதுக்கவிதையின் வாயிலாக புண்பட்டு புரையோடிப் போன ஒரு நாட்டின் மரண ஓலங்களின் பரிணமிப்பே!

யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியா சாலையில் கல்வி கற்று, பின்பு யாழ் உஸ்மானியா கல்லூரியில் ஏ.எல். முடித்து இடையில் ஏற்பட்ட இடைவெளியில் யாழ், பூபால சிங்கம் புத்தக சாலையின் பத்திரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
2



கைப் பகுதியில் கடமையாற்றி, அதன் மூலம் பல இலக்கியவாதிகளுடன் பரிட்சியம் ஏற்பட்டதின் காரண மாக, இவருள் தோன்றிய இலக்கிய தீபம் பிரான்ஸ் மண்ணில் இவர் வாழ்ந்து வரும் இக்கால கட்டத்தி லும் கொழுந்துவிட்டு எரியச் செய்த தினால், அங்கு வெளிவரும் சஞ்சி கைகளிலும், தமிழ் வானொலிகளி லும் இவரின் புதுக் கவிதைகள் பூத் துக் குலுங்குகின்றன. பிரான்ஸ் மண் ணோடு இவர் இலக்கியப்பணி நின்று விடாமல் எமையும் வந்தடையும் நோக்கோடு புத்தக உருவிலும் உரு வாக்கி இலக்கியத் தாயின் காலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யில் சமர்ப்பித்துள்ளார். இவ்விளை ஞரின் இம் முயற்சி தாய் மண்ணின் மீது கொண்டுள்ள பற்றையும் தமிழ் மக்களின் மீதுள்ள பாசத்தையும் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் சேவை பன்னெடும் காலம் தழைத்தோங்க என் வாழ்த்துக்கள்.

துரைசத்தியசீலன் B.A.
யாழ்ப்பாணம்.
1.9.89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

4



# முன்னுரை

வாழ்க்கை என்பதற்கு மற்றொரு பெயர் ''மாற்றம்'' மாற்றத்தை நிறுவ முடியுமே தவிர நிறுத்த முடியாது. புரட்சி என்பது மனித வாழ்வில் இன்றியமையாததொன்று. இவ்விருப தாம் நூற்றாண்டில் முதலாளித் துவத்திற்கெதிராய் உலகில் பல பாகங்களிலும் புட்சிக் குரல்கள் எழுப்பப்பட்டு அவை நிறைவேறிய புரட்சிகர வரலாறும் உண்டு. இன்று முதலாளித்துவதளைகளால் கட்டுண்டு உயிர் உடமை உறவுகளை இழந்து அறுந்த கயிற்றைப் போல் அங்கு மிங்குமாக பிரிந்து வாழும் ஈழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

## 5

மக்களின் நம்பிக்கைகள் நாளை ஒரு விடியலாக மலரும் என்பதே உண்மை. ஆனால் நமக்கு நாமே இட்டு வைத்துள்ள அடிமைத்தனத்தை நாமே நீக்கிக் கொள்ளுவதன் மூலம் நல்லதோர் எதிர்காலத்தை நமது சந்ததிக்கு ஏற்படுத்திக் கொண்டவராவோம். எனவே மனிதனால் மனிதனுக்கு உருவாக்கப்பட்ட அடிமைத்தனத்தை நாளைய வரலாற்றிலும் தொடரவிடாது தடுத்து நிறுத்த சிந்திப்பதே நமது தலையாய கடமையாகும்.

சொந்த மண்ணைவிட்டு அந்நிய மண்ணில் அகதியாக வாழ்ந்த போதிலும் தாய் மண்ணின் தீச்சுவாலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
6

என் நெஞ்சை வருத்திக் கொண்டே இருந்தன... அந்த உணர்வுகளின் வடிவமே இந்த "சுடலையாகும் நகரங்கள்" என்னும் சிறு கவிதைத் தொகுதி. இம்முயற்சி ஈடேற என் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டவரும் அன்புக்கும் மதிப் புக்குமுரிய ஓர் இலக்கியவாதியும் தொடர்ந்து எனது முன்னேற்றத் திற்கு பாடுபடும் அருமை மாமா யாழூர்துரை அவர்கட்கும் என்னை எழுது எழுதென்று என் இரத்த அணுக்களுக்கு உற்சாகமூட்டிய அன் புச் சகோதரன் எஸ்.கே. இராஜன் அவர்களுக்கும் திரு. செல்வா அவர் களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

1.9.89 — தீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

7



## சுடர்களின் பிரகாசம்

உங்கள்
புரட்சிப் பாதங்கள்
கொடிய முட்களை
கடக்கும் போதே
புரட்சி முட்களையும்
விதைத்து விட்டதனால்
அந்த
கொடியவரின்
பாதங்கள்.
துளைக்கப்படுகின்றன....

உங்கள்
நெஞ்சங்கள்
புனிதமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

8



அவை
எங்கள்
நிலத்தினை மீட்க
களத்திற்கு
புறப்படும் போதே
தியாகிகளாகி விடுகின்றன...

உங்கள்
மரணங்கள்
ஒளிமயமானவை
இங்கு
அழுது கொண்டிருந்த
மனிதரையெல்லாம்
இப்போ
சிந்திக்க வைத்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

9

இங்கு
இரவென்றால்
இருள்கள் தெரிவதில்லை
விடிவிற்காக
நீங்கள் செய்த
மரணப் புரட்சியால்
அவை கூட
ஒளி பெற்றுவிட்டன.

நீங்கள்
என்றுமே
எங்களோடு
வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்
உங்கள்
உயிர்கள்
எங்கள் உயிர்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

10

ஒன்றிப்போய்
உங்கள் உருவங்களை
எங்கள்
தேசங்களில்
சிலைகளாக
பார்க்கின்றபோதிலெல்லாம்.

எங்கள் தேசத்தில்
நீங்கள்தான்
ஆலயங்கள்
இங்கு
விளக்கம் தெரியாத
அந்த உருவங்கள்
தெருக்களில்
வீசப்பட்டு
உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

11

உருவச்சிலைகளைத்தான்
மக்கள்
வழிபட்டுக் கொள்கிறார்கள்

இங்கு
இப்போதும்
குத்துவிளக்கு
கற்பூர தீபங்கள்தான்
ஏற்றப்படுகின்றன....
ஏனென்றால்
நீங்கள் செய்த புரட்சிகள்
மென்மேலும் வளரவே
அப்புரட்சித் தீபங்களும்
மேல்நோக்கி எரிகின்றன.
எனிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

12

நாங்கள்
மெழுகுதிரிகளைத்தான்
விரும்பிக் கொளுத்துகின்றோம்
அவை
உங்களைப் போன்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
13



# புதிய காலங்களை நோக்கி

தோழா!
ஈரமுள்ள நெஞ்சம்
பாரம் அதிகமாய்த்தானிருக்கும்
நாங்கள்
அழுதழுதே சிந்திப்போம்
அதில்தான்
அதிக சுகங்கள்
இருக்கின்றன....

நாம்
பதிக்கும்
ஒவ்வோரு சுவட்டிலும்
கிடைக்கும்
அனுபவங்கள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

14




அபூர்வமானவை தோழா
அவைதான்
நாளைய
விடியலும்கூட

வியர்வை...
கண்ணீர்....
உதிரங்களாக...
நாமிட்ட
மூலதனத்தின்
விளைவை
நாளையவிடியலில்
நிச்சயம்
அனுபவிப்போம்
அணுவைவிட
அதிக வலிமையுடையவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

15



கருத்துக்கள்
இவை
மக்கள் மனதை
பற்றிக் கொள்ளும்வரை
தூற்றிக் கொண்டே இருப்போம்.

கனத்த இருளிலும்
எங்கள்
கால்களுக்கு
பாதைபுரியும் தோழா
அந்த
வெள்ளிகள்
அள்ளித்தரும் ஒளியில்...
பயணத்தை தொடருவோம்
''புதிய காலங்களை'' உருவாக்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

16



## சுதந்திரதினம்

இலங்கையிலே
இன்று
சுதந்திர தினம்....?
தமிழரின் பிணங்கள்
தெருக்களில் கிடந்து
அந்த நாளை
கொண்டாடிக் கொண்டிருக்கின்றன....

அவர்களின்
எலும்புக்கூடுகள்
புதைக்குழிக்குள் கிடந்து
நல்ல
சுதந்திரமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக்கொண்டு
கிடக்கின்றன......

உழைப்பாளிகளின்
உழைப்பெல்லாம்
சுரண்டல்
ஊசிகளால்
உறிஞ்சப்படுகின்றன......

எவரையும்
சுதந்திரமாக
பேசவிடாமல்
துப்பாக்கிகள்
பேசிக்கொண்டிருக்கின்றன......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
18

உரிமைகளெல்லாம்
எருமைகளுக்கு
தாராளமாக
கொடுக்கப்பட்டிருக்கின்றன.....

அந்த
அன்னியனின்
கொடியபாதங்கள்
அழியாமல்
இன்னும்
குழிகளாகவே
இருக்கின்றன......

அந்த வானத்தில்!
வெள்ளைப் புறாக்களை
பறக்க விடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

19



வலைகள்
விரிக்கப்பட்டிருக்கின்றன....
எல்லா நாட்களும்
இருளாகவே இருக்கிறது!
இன்று
இலங்கையின் சுதந்திர தினமாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
20



# எழுதி வைப்போம்

தேயிலை
இறப்பர் என்று
தினம்
ஏற்றுமதிப் பொருளை
உருவாக்கி
தந்தவரை
இன்று
ஏற்றுமதி செய்ய
நினைப்பவர்கள்
நினைக்கின்ற
பண்டங்களல்ல
நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

21

உயரத்தில்
இருப்பவர்கள்
உலகத்தை மாற்ற
தினம்
உழைப்பவர்கள்

அடிமைகளாக
வாழ்ந்தவர்கள்தான்
அந்த
அதர்மத்தை ஒழிக்க
இன்று
ஆயுதம்
ஏந்தியவர்கள்
எம்மை
அடிமைகளாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

22

கொடுமைகளை
இனி
கறுப்பு எழுத்துக்களில்
எழுதி வையுங்கள்
ஏனெனில்
காலங்கள்
ஓடிக்கொண்டிருக்கின்றன....
காலப்போக்கில்
மறவாது நினைத்து
பெருமை கொள்வதற்கு

இனியும்
உங்கள்
கொடிய பாதங்கள்
எங்கள் மலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

23



மிதிக்குமானால்
அந்த
மலைச்சரிவுகளே
உங்களை
சரித்துவிடும்
மலைகளோடு மோதி
மண் த்ரைகளாகி
மலைகளுக்கே உரமாகும்
உங்களைப் பற்றி
நாம்
சிவப்பு எழுத்துக்களில்
எழுதிவைப்போம்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

24



## சங்கே முழங்கு

ஈழ மண்ணின் விடிவிற்காக....
எங்கள் தோழர்களின்
செங்குருதிகள் சிந்தும்போது.....
எங்கள் வாழ்வோ
அகதி வாழ்வில்
முடங்கிக் கிடக்கிறதே
இங்கு
உறங்கிக்கிடக்கும்
தோழமை உள்ளங்களை
உணர்ச்சி பொங்கும்
புரட்சிக் கருத்துக்களால்
தட்டியெழுப்பிடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

25

இங்கு
முழங்குவது
  சங்கேமுழங்கு

ஈழமக்களின்
கண்ணீரால்
வரைந்து விட்ட
கறைபடிந்த
இவ்வாழ்வினிலே
ஏர் பிடித்த கரங்களினால்
ஏந்தி நிற்கும்
ஆயுதத்தை
ஏன்
என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

26

சற்று
சிந்தித்துக் கொள்வதற்கும்
எமக்கென்னவென்று
இருந்து விடும்
சிந்திக்க மறுக்கும்
உள்ளங்களை
சிந்திக்கத் தூண்டிடவே
இன்று முழங்குவது
சங்கே முழங்கு

எதிரியின் வலையில்
சிக்கிவிட்ட
எம்
சுதந்திர உரிமைகளை
ஏந்திவிட்ட ஆயுதத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

27

எப்படி
மீண்டெடுப்போம்
என்பதை
எடுத்துக் காட்டிடவும்
காலத்தால்
அழிக்கமுடியாத
ஒரு
புரட்சிக்காவியத்தை
ஈழமண்ணில்
முழங்கச் செய்வதற்கே
இந்த
இரவில் முழங்குகிறது
சங்கே முழங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
28

இன்னல் தோய்ந்த
இரவுகளில்
எத்தனையோ காலங்கள்
ஏங்கியே வாழுகின்றோம்
அந்த நாள்
வாழ்வினை — நாம்
நினைத்துப் பார்த்து
சிந்தனையே
மெருகூட்டிடவே
இயல், இசை, நாடகமென
முத்தமிழால்
முழங்கிடும்
சங்கே முழங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
29

?!

## புரியாத மனிதர்கள்

வடுக்களைத் தடவி
வானத்தை
பார்க்கிறோம்
சற்று
விடிவு தெரிகிறது
வற்றாத நதிகளுக்கு
புரிகிறது
நாம்
எதற்கு
நீந்திச் செல்கிறோமென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

30

!?

காலத்தைமாற்ற
கண்ணுறங்காமல்
கல்லையும் முள்ளையும்
கடந்து செல்லும் — எம்
கால்களைப் பற்றி
காடுகளுக்கும்
புரிகிறது!

உயர்ந்து நிற்கும்
குன்றுகளுக்கும்
இலட்சியத்தில்
உறுதியுடையவர்
என
எங்கள் நிலைமை
விளங்கியிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தீரன்*

31

கண்ணீர் கதைகளை
காவிச்சென்ற
காற்றுக்கு
தெரியும்
எம்
நெஞ்சக்கனவுகளைப்பற்றி.

கடல் வளையத்திற்கே
வலைபோட்டு விட்டு
கடல் தாண்டிச்சென்ற
கதைகளைக்கூட
அது
பேரிரைச்சலுடன்
சொல்லிக் கொள்கிறது
கலங்கிக்கிடக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

32

குளத்திற்கும்
நாட்டின் கலக்கம்
புரிகிறது
வாடிக்கிடக்கும்
வயல்களும்
விடுதலைப் பயிர் செழிப்பதை
அறிந்திருக்கின்றன....

வெறிச்சோடும்
நிலைமைகளினால்
அந்த
வீதிகளுக்கும்
சேதி தெரிகிறது
இங்கு
சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

33



மனிதர்களுக்கு
மட்டும்
இந்த
புரட்சிபற்றி
எதுவும்
புரியவில்லையாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

34



## விடிவு

கண்ணீர் நதிகளில்
கால விடிவிற்காக
நித்தமும் நாங்கள்
நீந்தியே வருகின்றோம்

விதியை மாற்றி
முடிவை எழுத
செங்குருதிகளை
சிந்தியே வருகிறோம்.

பூக்கள் மலர்ந்தன
புதிய விடியலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
35

புரட்சி மாலைகள்
ஆவதற்காக.

செங்கதிரோனின்
சிவப்பு விடியல் கண்டு
கருமேகங்கள்
கலைந்து செல்கின்றன...

அந்த நட்சத்திரங்கள்
மகிழ்ச்சி கொண்டாடுகின்றன.
மண்ணில் தோன்றிய
புரட்சி நட்சத்திரங்களைக்கண்டு

அல்லிகளைக் காண
சந்திரன் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்



துள்ளி மகிழ்கின்றான்
சுதந்திரனின் வரவுகண்டு

சுதந்திரத்தென்றல்
வீசிக்கொள்ள
தென்றலோடு புயல்
சமாதானம் பேசி வீசிக்கொள்கின்றன.

பறவைகள் சேர்ந்து
ஏதோ பேசிக் கொள்கின்றன..
புதுவிடியலில்
புரட்சிக்கீதம் பாடுவதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
37



# தியாகிகள்

அல்லும் பகலுமிங்கே
ஆயுதம் ஏந்தி நின்றாய்
அன்னை மண் காத்திடும்
அரும்பணியாற்றி நின்றாய்

வீரத்தாய் பெற்ற மைந்தா
விடுதலையுணர்வு கொண்டாய் —
ஈழ
விடிவினை ஏற்றி வைக்கும்
விடிவெள்ளியாய் காட்சிதந்தாய்.

களம் பல சென்று நீயோ
பலம் தனைப்பெற்றுவந்தாய் — உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

38



பலம் கண்டு தினம்
பகைவர்கள் ஓட்டம் கண்டார்.

அடிமை வாழ்வதனை
அகற்றிடத் துணிந்து நின்றாய்
புரட்சி வழிகளிலே — ஓர்
புதுமை படைப்போமென்றாய்

உழைக்கும் மக்களுக்கு
உரிமைகுரல் கொடுத்தாய்
உரித்து மண்ணிற்கு — உன்
உயிரை அர்பணித்தாய்

கடமை முடிந்த தென்றோ
களத்தினில் உயிர் நீத்தாய் — எம்
கண்ணீர் அழைப்பிற்கு
கருணை தான் கிடையாதோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
39



ஆற்றல் கொண்ட நெஞ்ச — நீ
அமைதி கொள்வதேனோ
உந்தன் நல் இலட்சியங்கள் — ஓர்
உயர்வை ஏற்றி வைக்கும்

அன்னை மண் விடியுமுன்னே .
அணைந்துவிட்ட தீபங்களே — உம்
பாத ஒளி சுவடுகளை
பணிந்து பின் பற்றி நிற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
40



## அடிமை

கொடுமை நிறைந்த
இருண்ட உலகில்
மனிதர்களாக
நாங்கள்
பிறந்தோம்
மனிதனை மனிதன்
அடிமைகளாக்கி
வாழும் இழிநிலை
ஒழிந்திடல் வேண்டும்!

சாதி சமயம்
ஓதியதெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
41

மனிதனை
அடிமைகளாக்கிய
சட்டங்களாச்சே

பெண்கள்
ஆண்களின்
அடிமைகளென்று
அந்த
அநீதி மன்றத்தின்
தீர்ப்புக்களாச்சே

ஓடித்தேடி
பொன் பொருட்கள்
சேர்ப்பார்
இவை
எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

42

பெண்ணுக்கு
சீதனமென்பார்.
ஆண்டான் அடிமை
ஆட்சிகள் தொடர
திருமணம் என்னும்
ஒருநாள் குறிப்பார்
முடிகள் சூடிய
மன்னன் வருவார்
மணவறை என்னும்
அரசிறை அமர்வார்
''அடிமை''யாக
அந்த அரசியும் வருவாள்
அவர்
அருகமைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

43

அவர்கரம்
பிடிப்பாள்

காலங்கள் ஓடும்
வேதனை நிறையும்
அடுப்புக்கள் எரியும்
அவள்
மனங்களும் எரியும்.

81754

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

44

ச ரி க ம ப த நி ச

## பாடுகுயிலே நீ பாடுகுயிலே

எங்களையே
பாடவைத்த
கவிக்குயிலே
உன்னை
பாடவேண்டாமென்று
சொன்னவர்கள்
யார்குயிலே!

அந்த
பாலைவனத்தை
சோலைகளாக்க
நீ
பாடிநின்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

45

அந்த
சோலையிலே
உனக்கு
பாட
இடமில்லையென்று
சொன்னவர்கள்
யார்குயிலே!

சோரம்போன
நம்மவரை
உன்
சாரம்
நிறைந்த
கவிதையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

46

சாடி நின்ற
சேரக்குயிலே
உன்னோடு
பேரம்பேசி
பார்த்தவர்கள்
யார்குயிலே!

தீரத்துடன்
நீ
வரைந்த
கவிகளெல்லாம்
போர்
தொடுத்தால்
அவர்
போய்விழுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
47




வெகுதூரத்திலே
நீ
பார்குயிலே!

விடியலுக்காய்
பாடுகின்ற
புரட்சிக்குயிலே
அந்த
விடிவு வரத்
தடுத்து நிற்கும்
கழுகுகளை
திருத்திடவும்
பாடுகுயிலே.....
நீ
பாடுகுயிலே.....

125800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
48



# கோடை நிழல்கள்

கோடையின்
கனப்பால்
எங்கள்
மனங்கள்
தவித்திருக்கும்
அந்த
இரும்பு
மனிதரிடும்
உபரிமதிப்பால்
மேலும்
எம்
உள்ளங்கள்
உடைந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்
வியர்வையை...
கண்ணீரை...
குடித்திருந்தால்கூட
எம்
பசி
தனிந்திருக்கும்.
எமக்கு வரும்
ஊதியமோ
எம்
இதயங்களை
மீண்டும்
ஊசிகளால்
குத்திவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

50

கடல்
குமுறும் போது
காய்ந்துபோன
கரைகள்
நீர்
பெறுவதுபோல்
எங்கள்
மனங்களும்
குமுறுகின்றன..
இந்த
உழைப்போனின்
வாழ்க்கை
மலர்வதற்காக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

51



எனினும்
அந்த
கோடையின்
கனப்பால்
காய்ந்துபோன
மரங்கள்
தரும்
நிழலிருந்து
சிந்திப்போம் — அந்த
புரட்சிக்காற்றை
சுவாசிப்பதற்காக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

52



# அம்மாவுக்கோர் கடிதம்

அம்மா அறிவது
கடிதம் கிடைத்தது
கண்ணீரை
கடன் வேண்ட முடியுமா என்று
தவிக்கின்றேன் அம்மா.

அம்மா அம்மாவென்று
சொல்லும்போது
நெஞ்சில்
துயரங்கள் விலகுவதுபோல்
இருக்கின்றன..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

53

உன்னை
தவிக்கவிட்டு
இந்த
அன்னியத்தாயிடம்
அடைக்கலம் புகுந்த
என்னைப்பற்றி
சிந்தித்துக் கொள்கிறேனம்மா

குளிர்.....
மழை.......
காற்று........
வெய்யில்...........
இவைதான்
என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

54

அதிகம்
சிந்திக்கவைத்தவை.

இது விஞ்ஞானத்தால்
முன்னேறிய நாடு
வசதிகள்
அதிகம்.

இவை
எம்மனிதருக்கு
புதுமையம்மா!
ஒரு பைப்பை
திறந்தால்
சுடுநீர்
மறு பைப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்தால்
சுடாத நீர்.
ஆனால்
எங்கள்
கிணற்றில்
நீராடிய மகிமை
இவற்றில் இல்லையம்மா!

இங்குள்ள
மனிதரின்
வாழ்க்கையை
பார்க்கும்போது.
இரவில்கூட சூரியன்
உதிக்கின்றானா — என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்தோன்றுகிறது
ஆனால்
எமக்கு
எங்குமே
அந்தச் சூரியன்
தெரிவதில்லையம்மா.

செருப்பைவிட
நாங்கள் தான்
அதிகம்
தேய்ந்து விடுகிறோம்
சுரண்டல் நோய்
இங்கும் உள்ளதம்மா
எம்மைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
57

அது
அதிகம் பீடித்திருக்கிறது
கழுதைதேய்ந்து
கட்டெறும்பானதுபோல்
தலையிலும்.....
முதுகிலும்.....
மாறி மாறி.....
சுமைகளை சுமக்கின்றோம்

இங்கே
கிணறில்லை
ஆனால்
கிணற்றுத்தவளைகள்
வாழ்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

58

இங்கு
சுதந்திரமாக மலரும்
றோசா . மலர்களைக்கூட
நான்
பறிக்க முனைவதில்லையம்மா!
விலங்குகளிட்ட
மொட்டுக்களாயிருக்கும்.
எங்கள்
றோசாக்களை
நினைப்பதால்தானம்மா!

இந்த
சோகப்பூக்கள்
சுதந்திரப் பூக்களாக
மலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
59

காலம்
நிச்சயம்வருமம்மா
எங்கள் வானம்
விடிவதற்காக
எத்தனை
தியாகங்கள் செய்தோம்
என்றும்
அது
வீணாகிப்போகாது அம்மா
எங்கள்
வியர்வைத்துளியில்
தெரியும் ஒளியிலே
அந்த் சூரியன்
வானிற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

60

சிவந்து
வருவானென்ற
நம்பிக்கை மலர்கள்
மட்டும்
நெஞ்சில் பூத்தநெருப்பிலும்
வாடாமல்
இருகுதம்மா
இப்படிக்கு
உன் பிரிவால்
வாடும்
அன்பு மகன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணனுக்கோர் கடிதம்

அண்ணா சுகமா
தங்கள்
கடிதம் கிடைத்தது
எங்கள் சுகங்கள்
துயரங்கள்தானே.

எப்போதும் போலவே
எங்கள் தெருவுக்கு
இராணுவம் வந்தது
அந்த
மரம்களும் கொடிகளும்தான்
அக்காவின் கற்பை
காத்திருந்தன...

தேசிய நூலகப் பிரி
நகர நூலக சே
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

62



நகரம்
நகர்ந்து செல்ல
சுடலைகள் விஸ்தரிக்கப்பட்டு
வீதிகளுக்கெல்லாம்
அதுதான் பெயர்

இங்கு
குடிசைகள் இல்லை
அவை
சாம்பலுக்கு
சத்தியம் செய்திருந்தனவாம்.

கட்டடங்களும்
கடைகளும்
செல்லடிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
63

சேதமாகிவிட்டன
நேரம்காட்டும் கோபுரத்திற்கும்
காலம் சரியில்லாததால்
சற்று
சேதமாகிவிட்டது

பத்திரிகைக் கடைமீது
செல்விழுந்ததால்
பத்திரிகை விற்பனையாளரும்
வங்கி மானேசரும்
பலியாகிப் போனார்கள்.

முற்றத்தில் தவழ்ந்த
செல்லக் குழந்தை
நடக்கத்தவித்தது
செல்லடி கேட்டு

81754

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

64

தாய் தூக்கு முன்னே
பிள்ளை துடித்தது
மணக்கோலம் மாறுமுன்பே
பிணக்கோலமாகிவிடும்
திருமணங்களும்
நடைபெற்றன.

புதிய இடமாற்றங்கள்
ஆசிரியர்களுக்கு
மட்டுமல்ல
மாணவர்களோடு
பள்ளிக்கூடங்களும்
மாணவர்களுக்கும்
புதிதாக
மரணச்சோதனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

65

நடைபெறுகின்றன.
இங்கே
சுகாதாரமில்லை!
நோய்களும் பரவுகின்றன...
நோயாளரின்
தொகையும் அதிகம்
ஆஸ்பத்திரி மீதும்
செல்கள் விழுவதால்
அதிகம்பேர்
இறந்து போகின்றனர்.

இங்கு
வீதிகளுக்குக்கூட
வெளிச்சமில்லை
எங்களுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையும்
ஹர்த்தால் அனுஷ்டிக்கின்றன.

எரிபொருட்களும்
தட்டுப்பாடு
ஆனால்
தமிழரை எரிக்க
தாராளமாகவுள்ளது.

மனிதனுக்குத் தேவை
மனிதன்
வயல்கள்
அதை
எப்படி உற்பத்தி செய்யும்.

முட்கள் மலராகலாம்
எதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

67

காலணிகளை கொஞ்சம்
கழட்டிவைப்போம்
அவைதான்
எமக்கு
புதிய முட்கள்

சாதிகள் சாகவில்லை
நதிகள் ஓடையாகின்றன
நாங்கள்
பகலையும்
இரவென்றே அழைப்போம்
அவையும் நாளை
அப்படியும் ஆகலாம்.

நாட்டு நடப்புக்களை
எழுதும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

68

எழுதினீர்கள்
எதை எழுத
சில செய்திகள்
எமக்கே
தெரிவதில்லை!

எனது
பிறந்தநாளை
வாழ்த்தியுள்ளீர்கள்
எமக்கு
எந்தநாளும்
நல்ல நாளென்று
எம்
நெஞ்சக்கலண்டர்கள்
சொல்லவில்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

69

கொழும்பில்
அணிவகுப்புகளும்
பீரங்கிமுழக்கங்களும்
மந்திரிகளும்
அவர் மக்களுமாய்
கொண்டாட்டாம்
வடக்கு கிழக்கில்
மக்கள் வரிசை....
துப்பாக்கி வேட்டுக்கள்....
துயரங்கள்....
அன்று
எந்தப் பறவையும்
வானில் பறக்கவில்லை
அன்றுதான்
சுதந்திரதினக் கொண்டாட்டமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

70

புதிய ஆயுதங்கள்
வேண்டவும்
புதிய முகாம்கள்
திறக்கவும்,
நல்லதோர் முயற்சி
சமாதானப்
பேச்சுவார்த்தை
அழுதும் பிள்ளை
அவளே பெறவேண்டும்
அவர்களும்
ஏனோ
அழுது கொள்கிறார்கள்.
சமாதானப் பேச்சில்.

நீங்கள்
பட்டத்தை மாற்றாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

71

இங்கு
வந்தாலும்
அதுதான் பட்டம்
இங்கு
அகதிகள் முகாம்கள்
அதிகம்
பிறக்கும் குழந்தைகளும்
"அம்மா" "அம்மா" என
அழாமல்
ஆமி ஆமி என்று தான்
அழுகின்றன
தாய்மாரும்
தாலாட்டை
மறந்துவிட்டு
வாராரோ வாராரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான்
பார்க்கின்றனர்.


தங்கைகளுக்கு
சீதனம் தேடுவதோடு
நின்றுவிடாதீர்கள்
அவர்கள் வாழ
நாடும் வேண்டும்
எங்கள்
ஐக்கியத்திற்காகவும்
உங்கு
குரல் கொடுங்கள்.

நீங்கள்
நாகரிகமான
நாட்டில் வாழுகின்றீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்






கொஞ்சம்
பழையதையும்
பேணுங்கள்.
இங்கு
மாட்டு வண்டிகள்தான்
ஓடுகின்றன.....
தொட்ட பணி
தொடர
மீண்டும் பலர்....
விமானத்தில் குண்டு....
நாங்களும்
வாழ்கின்றோம்
இப்படிக்கு
அன்பு மறவாத
''தம்பி''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
74



## தம்பிக்கோர் கடிதம்

அன்புத் தம்பிக்கு
அக்காவின் வணக்கம்
கடிதங்களில்
சுகம் கேட்டு எழுதாதே
துயரங்களை கேட்டெழுது
நீயிருக்கும்
நாட்டைப்பற்றி
எழுதாதே
அது
எங்கள் நாட்டையே
பழிப்பது போலிருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

75

இங்கு
பதுங்கு குழிகளும்
மண்மூடை அரண்களும் தான்.
எங்கள்
புதியவீடுகள்
பதுங்குவதும்....
ஒதுங்குவதும்....
ஓடுவதும்தான்
எங்கள்
புதிய சுகங்கள்

இங்கே
எல்லாமே
மயானம்தான்
எங்கள் மண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்



அதுதான்
அதிகம்
ஆதிக்கம்
செலுத்துகின்றது.

எரிந்த வீடுகள்...
எத்தனையோ கடைகள்...
இடிந்த கட்டடங்கள்...
கருகிய உடல்கள்...
கை, காலிழந்து...
கண்ணிழந்து....
கற்பிழந்து...
எரியும் மனங்களோடு
வாழும்
எங்கள் மனிதர்கள்....
இவைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

77

எங்கள் மண்ணில்
இன்றைய காட்சிகள்.

கற்றுத்தேறிய
கல்விக்கூடங்கள்
களியாட்ட இடங்கள்
திரிந்த தெருக்கள்
தொழிலகங்கள்
இவை எல்லாமே
இன்று
மனிதரை இழந்து
மௌனித்துக் கிடக்கின்றன!
எனக்கு
திருமணம்
பேசும்படி
எழுதியிருந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

78

நல்லது. தம்பி
இன்னுமின்னும்
சாதிபார்த்து
சீதனம் வேண்டி
திருமணம் புரியும்
ஆண்களை
நான்
வெறுக்கின்றேன்.
நீ
ஐரோப்பாவில்
வாழ்கிறாய்
உது
அன்னியநாடென்பதை
நினைத்துக்கொள்
எங்கேயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

79

வாழலாம்
என எண்ணி
கோடையின் வெப்பத்தை
தாங்காமல்
படமெடுத்து நின்ற
பாம்பின் முன்
நிழலாறிய
கிணற்றுத்தவளையின்
கதையும்
படித்திருப்பாய்
ஆனால்
எங்கள்
உணர்வுகளால்....
உகுத்த கண்ணீர்கள்....

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
80

பாய்ந்த குருதிகள்......
தொலைந்த முகங்கள்....
பதிந்த சுவடுகள்.....
இவை
சுதந்திரவிடியலுக்குத்தான்
என்பதை
மறந்து விடாதே
இப்படிக்கு அன்புள்ள அக்கா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேசிய நலம் வேண்டி நாளும் உழைத்த சமாதானத் தூதுவன் விஜேகுமாரணதுங்க

கடமையே
வாழ்வென
மடமையை
துடைத்திடும்
பொதுவுடமை
கருத்தினை
நெஞ்சினில்
சுமந்தாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

82



அடிமைகளாய்
வாழும்
மக்கள்
துயரங்களை
இடித்தெறியும்
நற்கருத்துக்களை
நாள்தோறும்
விதைத்தாய்!

இனவிடிவு காண
இறுதிவரை
உழைத்து
ஈனரின்
கொடுமைக்கெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்



ஆப்புரை
வைத்தாய்!

வாழ்க்கையின்
வரலாற்றுச்
சுவடுகளை
துயரோடு
சுமக்கும்
தமிழர்
நெஞ்சங்களில்
நிழல்போல்
நின்றாய்!

நாடு போற்றும்
நல்லதோர்
தலைவனாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
84

கலையுலகில்
நடிகனாய்
பாடகனாய்
மக்கள் மனதில்
ஒளிவிடும்
விண்மணியே!

இன்று — நின்
இழப்பால்
அல்லலுறும்
நெஞ்சங்களின்
கண்ணீர்
''அஞ்சலி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

85



## ஏழைகள் தோழன் என்றும் எம்முடன் வாழும் எம்.ஜி.ஆர்

கால வெளிச்சமாய்
வாழ்வில் ஒளிசிந்தி
கொள்கைவழி நின்று
நல்வழி காட்டிய
நாயகனே!

உண்மையே வாழ்வென — அது
உலகினில் நிலைபெற
உன்னதக் கருத்துக்களை
உள்ளத்தில் சுமந்த
உத்தமனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்

86



ஏழைகள் நெஞ்சங்களில்
சிந்தனைப் பூக்கள் மலர
எழுச்சி நிலவாய்
ஒளி சிந்திய
புரட்சிச் சுடரே!

திரைவானில்
விடிவெள்ளியாய்
புதுவிடியல்
காணத்துடித்த
புரட்சி நடிகரே!

இன்னல்படும் சோதரரின்
இன்னுயிரைக் காத்திட
இரத்தத்தின் இரத்தமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81754

12588cc

இதயக்குரல் கொடுத்த
இலட்சியக் கதிரே!

அரசியல் வாழ்வை
அடிமை இருள் போக்கும்
ஆயுதமாகக் கருதிய
அரும் பெரும்
புரட்சித் தலைவா!

மனித இனத்தின்
மாபெரும் சரித்திரமாய்
மக்கள் மனங்களில்
மங்காது வாழும்
மக்கள் திலகமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்
88

இன்று — உம்
இழப்பைத்தாங்காது
இன்னல்படும் இதயங்களில்
"இதயக்கண்ணீரை" — நின்
இலட்சியப் பாதங்களுக்குக்
காணிக்கையாக்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org